பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 08 2026 THURSDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டன.

2. இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்திற்கு மக்கள் அளித்து வரும் ஆதரவு பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் 67 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான 97 ஒப்பந்தங்கள் முதலமைச்சர் திரு. விஜய் முன்னிலையில் இன்று கையெழுத்தாகின.

4. Liberia-வின் வெளியுறவு அமைச்சர் திருமதி. Sara Beysolow Nyanti இரண்டு நாள் அரசுமுறைப் பய□ மாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.

5. காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன் போட்டியில் இந்தியா 5 தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>>>><<<<<<<

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் இன்று நிறைவடைந்தது. இரு அவைகளும் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டன.

மக்களவை இன்று கூடியதும், வந்தேமாதரம் தேசியப் பாடல் இசைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதன் கார□ மாக, அவை நடவடிக்கைகள் மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்படுவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா அறிவித்தார்.

மாநிலங்களவையில் சுரங்க மற்றும் கனிமங்கள் சட்டத்திருத்த மசோதா நிறைவேறியது.

எதிர்க்கட்சிகளின் அமளி கார□ மாக, மாநிலங்களவை நடவடிக்கைகளும் மறு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டன.

இதற்கிடையே, இந்தக் கூட்டத் தொடரில் 12 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டத் தொடரில் மாநிலங்களவையின் செயல்பாடுகள் 39 சதவீதமாக இருந்தது என்று கூறினார்.

மக்களவை செயல்பாடுகள் 19 சதவீதமாக இருந்தது என்றும் திரு. கிரண் ரிஜிஜு குறிப்பிட்டார்.

>>>>>>>><<<<<<<

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான சங்கீத நாடக அகாடமி விருதுகளை இன்று புதுதில்லியில் வழங்கினார்.

இசை, நடனம், நாடகம் போன்ற துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய 115 பேருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

>>>>>>>><<<<<<<

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்திற்கு மக்கள் அளித்து வரும் ஆதரவு பெருமிதம் அளிப்பதாக உள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இந்த இயக்கத்தின் கீழ் தேசியக்கொடியை ஏற்றி வைத்த பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்த இயக்கத்தின் வெற்றி, நாட்டு மக்களின் தேசப்பற்றையும், ஒற்றுமையையும் எடுத்துரைப்பதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டு நலனுக்கே முதல் முன்னுரிமை என்ற அடிப்படையில் அனைவரும் செயல்பட வேண்டும் என்றும் திரு. ராம்மோகன் நாயுடு கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே, இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக, குஜராத் முதலமைச்சர் திரு. புபேந்திர பட்டேல், காந்திநகரில் உள்ள தமது இல்லத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

*இதற்கான நிகழ்ச்சியில் பேசிய அவர். 70 லட்சத்திற்கும் மேற்பட்ட இல்லங்களில் தேசியக்கொடி ஏற்ற இலக்கு நிர்□ யிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*இந்த இயக்கத்தின் கீழ் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேரணிகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.*

*நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் எடுத்துரைக்கும் வகையில் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இந்த இயக்கத்தில் பொதுமக்கள் அனைவரும் முழுமையாக பங்கேற்க வேண்டும் என்றும் திரு. புபேந்திர பட்டேல் கேட்டுக் கொண்டார்.*

*>>>>>>>><<<<<<<*

*Liberia-வின் வெளியுறவு அமைச்சர் திருமதி. Sara Beysolow Nyanti இரண்டு நாள் அரசுமுறைப் பய□ மாக இன்று புதுதில்லி வந்துள்ளார்.*

*வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.*

*இந்தியா - லைபீரியா இடையேயான இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்த பேச்சுக்களில் இடம்பெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*>>>>>>>><<<<<<<*

*தமிழகத்தில் 67 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான 97 ஒப்பந்தங்கள், முதலமைச்சர் திரு. விஜய் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.*

*சென்னையில் நடைபெற்ற வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாட்டில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.*

*இதற்கான நிகழ்ச்சியில் பேசிய மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா,*

*இதன்மூலம் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று கூறினார்.*

>>>>>>>><<<<<<<

*தமிழக மீனவர்கள் 9 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செசய்யப்பட்டனர்.*

*சர்வதேச கடல் எல்லையை தாண்டி மீன்பிடித்ததாக கூறி, ராமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்த மீனவர்களை, இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - கார்த்திகேயன் 44 செகண்ட்ஸ்)*

>>>>>>>><<<<<<<

*மத்தியபிரதேசத்தில் 43 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தொழில் முதலீடுகளை ஈர்க்க வகைசெய்யும் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.*

*போபாலில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், இதன் மூலம் 15 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறினார்.*

>>>>>>>><<<<<<<

*மஹாராஷ்ட்ராவில் வாடகை கார் ஓட்டுநர்கள் மராத்தி மொழி தெரிந்திருப்பதை கட்டாயமாக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதாவை கொண்டு வர அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.*

*மும்பையில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அம்மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. Pratap Sarnaik, ஆட்டோ மற்றும் டாக்ஸி ஓட்டுநர்கள் மராத்தி மொழியை கற்றுக்கொள்வதற்கான காலஅவகாசம் நீட்டிக்கப்படமாட்டாது என்று கூறினார்.*

*இதற்கான காலஅவகாசம் நாளை மறுநாள் முடிவடைவதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*மராத்தி மொழி தெரியாத ஓட்டுநர்களின் உரிமங்கள் தற்காலிகமாக ரத்து செய்வதற்கான அம்சங்கள் இந்த சட்டத்திருத்தத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் திரு. Pratap Sarnaik தெரிவித்தார்.*

>>>>>>>><<<<<<<

*ஜார்க்கண்ட்டில் தேர்வு முறைகேட்டிற்கு எதிராக மா□ வர்கள் மேற்கொண்டு வரும் போராட்டம், 20வது நாளாக இன்றும் நீடிக்கிறது.*

இந்த போராட்டத்தின் ஒரு பகுதியாக வரும் 20ஆம் தேதி முதலமைச்சர் இல்லத்தை முற்றுகையிடப் போவதாக மா□ வர் அமைப்புகள் அறிவித்துள்ளன. மா□ வர்கள் போராட்டம் கார□ மாக, மாநிலம் முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

>>>>>>>><<<<<<<

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவடைய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இது அடுத்த 24 மணி நேரத்திற்குள் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, மேற்குவங்கம், பங்களாதேஷ் கடற்கரை பகுதியை நோக்கி நகரக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் கார□ மாக ஒடிசாவில் பெய்து வரும் கனமழை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தின் சில பகுதிகளில அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

சத்திஷ்கட் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களின் ஒரு சில பகுதிகளிலும் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

அமெரிக்காவில், இந்தியாவின் சுதந்திர தினத்தை சிறப்பாக கொண்டாட விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான சிறப்பு பிரகடனத்தை அமெரிக்க அரசு வெளியிட்டுள்ளது.

இதன்படி, நாளை மறுநாள் சுதந்திர தினத்தை இந்தியா தினமாக கொண்டாட இந்த பிரகடனத்தில் வகைசெய்யப்பட்டுள்ளது.

>>>>>>>><<<<<<<

காமன்வெல்த் வாள்வீச்சு சாம்பியன் போட்டியில் இந்தியா 5 தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

நைஜீரியாவின் Lagos-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் குழுப் பிரிவில் இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெள்ளிப்பதக்கம் வென்ற இந்தியா, மகளிர் குழுப்பிரிவில் இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 13 தங்கம், 8 வெள்ளி, 14 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>>>>><<<<<<<

மலேசிய சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Tara Shah காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-11, 21-8 என்ற செட்க□ க்கில் இந்தோனேஷியாவின் Yulia Yosephine Susanto-வை வென்றார்.

இப்போட்டியில் Tasnim Mir, Tanvi Patri, Rithvik Sanjeevi Satishkumar ஆகியோரும் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

>>>>>>>><<<<<<<

தென்கொரியாவில் நடைபெற்று வரும் சர்வதேச இளையோர் வில்வித்தை போட்டியில் இந்திய மகளிர் பிரிவு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>>>><<<<<<<

இந்தியா - மலேசியா இடையே 21 வயதுக்குட்பட்டோருக்கான ஐந்தாவது மற்றும் இறுதி ஹாக்கிப் போட்டி இன்று பெங்களூருவில் நடைபெறுகிறது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் நான்கு ஆட்டங்களிலும் இந்தியா வெற்றிபெற்றுள்ளது.

>>>>>>>><<<<<<<

Cairns கோப்பைக்கான செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் Divya Deshmuk வெற்றிபெற்றார்.

>>>>>>>><<<<<<<

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைப்பந்து போட்டி, அஹமதாபாதில் இன்று தொடங்கியது

>>>>>>>><<<<<<<

பேட்மிண்டன் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் மகளிர் பிரிவில் இந்தியாவின் பி.வி. சிந்து 9-வது இடத்தில் உள்ளார்.

>>>>>>>><<<<<<<

Brownsburg சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dakshineswar Suresh காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-3, 7-5 என்ற செட்க□ க்கில் இங்கிலாந்தின் Liam Broady-யை வென்றார்.

>>>>>>><<<<<<<